**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**O.S. No. 16/2016**

**நாள்.11.03.2026**

**வா.சா. 2 - ராமச்சந்திரன்**

**2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் எது என்றால் கரிவலம்வந்தநல்லூர். என்ன தொழில் செய்கிறேன் என்றால் முன்னர் ஐஸ் கம்பெனி வைத்திருந்தேன், தற்போது வயதாகிவிட்டதால் தற்போது வீட்டில் தான் இருக்கிறேன். நான் ஐஸ் கம்பெனி நடத்தி வட்டித்தொழில் செய்து வந்தேன், ஆறுமுகம் என்பவர் மீது புரோநோட்டு, காசோலையின் படி கடனை திருப்பி செலுத்தாதால் மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கடனை 10 பேருக்கு கொடுத்துள்ளேனா என்றால் இல்லை ஆறுமுகத்திற்கு மட்டும் தான் கொடுத்தேன். என்னை சாட்சி சொல்ல யார் அழைத்து வந்தார்கள் என்றால் 2 வது வாதி ராஜலட்சுமி. 2 வது வாதி ராஜலட்சுமி எனக்கு என்ன உறவு என்றால் மருமகள். வழக்குச் சொத்திற்கு எந்தப் பக்கத்தில் என் வீடு உள்ளது என்றால் வழக்குச் சொத்து பொன்னம்மாள் தெருவில் உள்ளது எனது வீடு பம்பு தெருவில் உள்ளது. பொன்னம்மாள் தெருவிலிருந்து எனது வீட்டுக்கு எவ்வளவு தூரம் என்றால் 30 மீட்டர் இருக்கும். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலம் டைப் செய்து வைக்கப்பட்டிருந்ததில் நான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். வழக்குச் சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான பத்திரங்களை நான் பார்த்துள்ளேனா என்றால் பத்திரங்களை நான் பார்த்ததில்லை. எதன் அடிப்படையில் வழக்குச் சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என சொல்கிறேன் என்றால் திருமலை வேலு செட்டியார் மற்றும் அவரது மகன்கள் எனது அப்பா மற்றும் எங்கள் முன்னிலையில் வழக்குச் சொத்தை வாதிகள் பாலம்மாள், ராஜலட்சுமிக்கு கொடுத்தார்கள். அவ்வாறு வாதிகள் பாலம்மாள், ராஜலட்சுமி கிரையம் வாங்கிய பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேனா என்றால் சாட்சி கையொப்பம் போடவில்லை. வாதிகளுக்குப் பாத்தியப்பட்ட வீட்டிற்கு மேல்பக்கம், 1 மற்றும் 2 வது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட வீடு உள்ளது என்றால் சரிதான்.

நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லிய 3 மற்றும் 4 தபசில் சொத்துக்கள் எங்குள்ளது என்றால் சொத்துக்கள் சர்வே எண்.1411/20 மற்றும் சர்வே எண்.1411/19 ல் உள்ளது அது சீனி செட்டியாருக்குப் பாத்தியப்பட்ட இடம் அது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட இடம். சர்வே எண்.1411/20 மற்றும் சர்வே எண்.1411/19 பற்றி எந்த ஆவணத்தை பார்வையிட்டு தெரிந்து கொண்டேன் என்றால் ராஜலட்சுமி தெரிவித்தார் அதன் அடிப்படையில் தெரிந்துகொண்டேன். சர்வே எண்.1411/20 மற்றும் சர்வே எண்.1411/19 பற்றி எந்த ஆவணத்தையும் நான் பார்த்தது கிடையாது என்றால் சரிதான். வாதிகளுக்குப் பாத்தியப்பட்ட வீட்டிற்கு மேல்பக்கம் உள்ள சந்து 1, 2, 3 பிரதிவாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. வாதிகள் 1 முதல் 4 தபசில் சொத்துக்களை எந்த காலத்திலும் தனித்து அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளுக்கு வாய்மொழியாகவும், பத்திரத்தின்படியும் சொத்து கிடைத்ததாக சொல்லியுள்ளேன் எந்த முறையில் கிடைத்தது என்பது சரி என்றால் பத்திரத்தின்படி தான் கிடைத்தது. எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளுக்கு வாய்மொழியாக சொத்து கிடைத்ததாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்களினுடைய உரிமை மூலம் மற்றும் அனுபவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது, 2 வது வாதி எனது மருமகள் என்பதால் அவருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றங்களில் பல வழக்குகளில் சாட்சி சொல்லி முன் அனுபவம் உள்ளவர் என்றால் சரியல்ல ஆறுமுகத்திற்கு எதிராக மட்டும் தான் வழக்கு போட்டு சாட்சி சொன்னேன். எனக்கும் 2 வது பிரதிவாதி கணபதிக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். எனக்கும் 2 வது பிரதிவாதி கணபதிக்கும் இடையிலான பகையின் காரணமாக அவருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>2 மற்றும் 3 வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>**

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.03.11 17:06:12 +0530